இணைப்பு

(593 ஆம் பக்கத்திலுள்ள உடுக்குறியிட்ட வினா எண் 595-க்கான விடையைக் காண்க.)

ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்கள்.

ஊராட்சி ஒன்றியப் பள்ளி ஆசிரியர்களை அரசு ஊழியர்களாகக் கல்வித் துறைக்கு எடுத்துக்கொண்ட பின்னர், ஊராட்சி ஒன்றியங்களின் ஆளுகையில் இருந்து மாறவேண்டும் என்ற அடிப்படையில் ஆசிரியர்களுடைய நிர்வாகம் பணிகளை கவனிக்க மாநில முழுவதும் 366 புதிய உதவிக் கல்வி அலுவலர் பணியிடங்களை தோற்றுவித்து அவ்வலுவலகத்தின் மூலம் ஊராட்சி ஒன்றிய ஆசிரியர்களது நலன்கள் கவனிக்கப்படுகிறது. ஆசிரியர்கள் பிற பணிகள் எதற்கும் பயன் படுத்தக்கூடாது என்ற வகையில் தக்க ஆணைகளும் வெளியிடப்பட்டுள்ளது. மேலும் இவர்களுக்கு மாத ஊதியம் தடையின்றி அரசு ஊழியர்களுக்கு வழங்கப்படுவது போன்று நிதி ஒதுக்கீட்டை எதிர்நோக்கி தாமதம் ஏற்படாத வகையில், ஒவ்வொரு உதவிக் கல்வி அலுவலருக்கும் "தன்வைப்புநிதி" என்ற தலைப்பில் புதிய கணக்கு ஒன்று துவக்கப்பட்டு அதில் தொடக்கத்தொகையாக ரூ. 9,91,00,000 அளித்து ஆணைகள் வெளியிடப்பட்டுள்ளன. இவர்களுக்கான தனி பணிவிதிகள் விரைவில் வெளியிடப்படும் நிலையில் உள்ளது.

2. ஒன்றிய ஆசிரியர்களைப் பொறுத்தமட்டில் ஒவ்வொரு ஒன்றியமும், ஒரு தனி அலகாக கருதப்பட்டு, இவர்கள் மாறுதல் நியமனம், மற்றும் பதவி உயர்வு ஆகியவை கவனிக்கப்படுகிறது. பதவி உயர்வுதொடர்பாக ஒவ்வொரு ஆண்டும் மார்ச் மாதம் 15-ம் நாளன்று உள்ளவாறு பணி முன்உரிமைப் பட்டியல் தயாரிக்கப் பட்டு பதவி உயர்வு, அளிப்பது முறைமைப் படுத்தப்பட்டுள்ளது.

3. மேலும் ஒன்றிய ஆசிரியர்கள் பணியில் உள்ளபோது இறக்க நேரிட்டால், அவர்களுடைய குடும்பத்திற்கு உடனுக்குடன் "குடும்ப நலத் திட்டத்தின் கீழ்" உதவித்தொகை வழங்கவும், குடும்பத்தில் உள்ள வாரிசுதாரர் ஒருவருக்கு வேலைவாய்ப்பும் அளிக்க தக்க அறிவுரை வழங்கப்பட்டுள்ளது. இவ்வாசிரியர்களின் நியமனம், மாறுதல் தொடர்பாக மாவட்டக் கல்வி அலுவலர் மற்றும் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர் உள்ளிட்ட குழு ஒன்று அமைக்கப்பட்டு அவற்றின் மூலம் கவனிக்கப்படுகிறது.

1987 மே 5]

இவ்வாசிரியர்களின் நிர்வாகப் பொறுப்பினைக் கவனிக்க ஏற்படுத்தப்பட்டுள்ள உதவிக் கல்வி அலுவலக நிர்வாகப் பணிகள் சரிவர நடைபெறுவதைக் கண்காணிக்க மாவட்ட அளவில் ஆய்வுக் குழுக்கள் ஏற்படுத்தப்பட்டு அவற்றின் மூலம் "திடீர் ஆய்வு" செய்யப்பட்டு கவனிக்கப்படுகிறது. அரசு தற்போது ஆரம்பப் பள்ளி ஆசிரியர்களின் நலன்களைக் கவனிக்க ஏதுவாக தனி இயக்குநரகம் ஏற்படுத்தப்பட்டு அவற்றின் மூலம் நிர்வாகம் சிறப்பாக நடைபெற்று வருகிறது.

நகராட்சி, மாநகராட்சிப் பள்ளி ஆசிரியர்கள்.

இம்மாநிலத்தில் மாநகராட்சி மற்றும் நகராட்சிப் பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர் மற்றும் ஆசிரியரல்லாதோரை 1—6—1986 முதல் அரசு ஊழியர்களாக்கி அரசு உத்தரவிட்டுள்ளது. (அரசாணை எண் 702, கல்வி, நாள் 23—5—1986) இவர்களை அரசுப் பணியில் ஈர்த்துக்கொள்ள கடைபிடிக்கவேண்டிய முறைகளை ஆராய்ந்து அரசுக்கு பரிந்துரை செய்ய, கீழ்க்கண்ட உறுப்பினர்களைக் கொண்ட குழு ஒன்றை அரசு அமைத்துள்ளது :—

1. கல்வித் துறை செயலாளர்—தலைவர்.
2. நிதித் துறை செயலாளர்—உறுப்பினர்.
3. நகராட்சிகள் நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்குத் துறை செயலாளர்—உறுப்பினர்.
4. நகராட்சி நிர்வாகங்கள் இயக்குநர்—உறுப்பினர்.
5. பள்ளிக் கல்வி இயக்குநர்—உறுப்பினர்-செயலர்.

மேற்சொன்ன குழுவின் பரிந்துரைகளின் மேல் அரசு ஆணையிட சிலகாலம் பிடிக்கும் என்பதால் அதுவரை நியமனம், மாறுதல், ஊதியம் வழங்குதல் போன்ற எல்லாப் பணிகளிலும், தற்போதுள்ள முறையே தொடர்ந்து கடைபிடிக்கலாம் என்று அரசு தெளிவுரை வழங்கியுள்ளது.